ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கிலஹு ஆவணிமீ பகுதி ௮.
Vol 6. *August & September 1929.* No. 8.

ஞானப்பெண்.

உடையவர் வயலாலிமணவாளனையும், திருமங்கைமன்னனையும் மங்களாசாஸநம் செய்வதற்காகத் திருவாலிதிருநகரிக்கு எழுந்தருளினார். அப்பொழுது அவ்வூர்த் தெருவில் ஒரு பள்ளப்பெண் நின்றாள். அவளைக்கண்ட இராமாநுஜரின் சிஷ்யர்கள் அவளை நோக்கித் 'தூரவிலகிநில்' என்றார்கள். அவள் இவர்களை நோக்கி 'ஒருபால் அள்ளலம்பூங்கழனி; ஒருபால் வயலாலிமணவாளன் கோயில்; ஒருபால் தேவரீர்கள்; ஒருபால் தோரணநெடுவீதியும் நீணிலாமுற்றமும் அடியேன் எங்கே விலகுவேன்' என்றாள். இவ்வுரைகளை எம்பெருமானார் கேட்டு வியப்புற்று 'இவள் ஆழ்வார் திவ்யஸூக்திப்படியே பேசுகின்றனளே' என்றுகந்து அவளைக் கடாக்ஷித்து எழுந்தருளினார்.

எல்லாவிடங்களும் பரிசுத்தமுடையனவாயிருக்கின்றமையால் அபரிசுத்தையாகிய யான் எங்கே ஒதுங்குவேனென்பது ஞானப் பெண்ணின் கருத்து. திருமங்கைமன்னன் "அள்ளலம்பூங்கழனி யணியாலி" என்பது முதலாக அருளிச்செய்த அருளிச்செயல் இப் பெண்ணின் மனத்தில் ஊற்றிருந்து இங்ஙன முரைசெய்தனளே என்பது உடையவருக்குண்டாகிய வியப்பு. மேலும், ஆழ்வாருடைய ஜ்ஞாநத்திற்கு எல்லாம் பகவதாத்மகமாய்த் தோன்றியது போல இந்தப் பெண்ணின் ஜ்ஞாநத்திற்கும் எல்லாம் பகவத்ஸ்வரூப

மாக விளங்கியதினால் இவள் ஞானப்பெண்ணென்று வழங்கப் பெற்றாள்.

இனி, ஆழ்வாருடைய ஜ்ஞாநவிஷயத்தோடு இப்பெண்ணின் ஜ்ஞானவிஷயமும் ஒற்றுமையுற்றிருந்தமை ஆராயப்பெறும்.—

"ஒன்றுந்தேவுமுலகுமுயிருமற்றும் யாதுமில்லா" த காலத்தில் ஸர்வேசுவரன் உலகை சிருஷ்டித்துச் சேதனுசேதனங்களில் அநுப் பிரவேசித்துக் காத்து * நிமித்தோபாதாந ஸஹகாரிகாரணங்களும் தானேயாயிராநின்றான். இங்ஙனம் எல்லா வஸ்துக்களிலும் தவரு திருக்கின்றானுதலால் எல்லா வஸ்துக்களின் † ஸத்தா, ஸ்திதி ப்ர வர்த்திகளும் அவனதீனகளேயிருக்கின்றன. இவ்விஷயத்தை ஆழ்

---

* குடத்திற்கு நிமித்தகாரணம் குயவன். துணைக்காரணம் தண்டம், (கோல்) சக்கரங்கள். உபாதான காரணம் மண்ணுருண்டை. ஆக இந்த மூன்று காரணங்களும் வெவ்வேறாக விருக்கக் காண்கின்றோம். ஸர்வேசு வரன் ஒருவனே இந்த மூன்று காரணமாகவுமிருக்கின்றானென்பதே அவ னிடத்திற்கண்ட ஆச்சர்யம். ஸர்வேசுவரன் தனது ஸங்கல்பத்தால் உலகை சிருஷ்டிக்கின்றானுதலால் நிமித்தகாரணமாகின்றான். அவனுடைய ஜ்ஞான சக்தியாதிகளே துணைக்காரணமாம். தன்னுடைய அம்சமாகிய சரீரத்தைக் கொண்டே சிருஷ்டிக்கின்றானுதலால் உபாதானகாரணமாயுமாகின்றான். இங்கு ஸர்வேசுவரன் நிமித்தகாரணமாயும், துணைக்காரணமாயுமிருக்கின்று னென்பதில் விவாதமில்லை. உபாதானகாரணமும் தானேயாயிருக்கின்று னென்பதில் மாத்திரந்தான் சம்சயமுண்டாகும். எவ்வாறெனின்; உபா தாநத்வமாவது.— இனி வரப்போகிற புதிய நிலைமையுடைய திரவியத்திற்கு முன்னிருந்தநிலைமையின் சம்பந்தமாம். இனி உண்டாகப்போகிற குடத்திற்கு முன்னிருந்த மண்ணுருண்டை உபாதாநம். மண்ணுருண்டை விகாரப்பட்டு காரணமாவதுபோல ஸர்வேசுவரனும் உபாதனமாம்போது விகாரமடைகின்று னென்று கொள்ளவேண்டும். அப்படியாம்போது அவன் நிர்விகாரனென்று சொல்லக்கூடாது. இனி, இதற்கு எவ்வாறு சமாதானங்கொள்வதெனின்; அவன் சரீரங்களாகிய சேதனுசேதனங்கட்கே விகாரமுண்டாகின்றதேயன்றி அவனுக்கு விகாரமுண்டாவதில்லையென்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு சிலந்திப்பூச்சி தன் சரீரத்தில் யாதொரு விகாரப்பாடில்லாமலே மிகுந்த நூலை விடுகிறது. இங்ஙனம், அற்பஜந்துவாகிய இந்தப் பூச்சிக்கு இவ்வளவு சக்தியிருந்தால் ஸர்வசக்தனுன ஸர்வேசுவரன் தன் ஸ்வரூபத்திற்கு யாதொரு விகாரப்பாடில்லாமலே உபாதானமாகின்றானென்பதில் யாது குறையுளது?

† ஸத்தை—உளதாதல். ஸ்திதி—நிலைபெறுதல்.

வார் § "நாமவனிவனுவன்" என்ற பாசுரத்தாலும், "அவரவர்தமதமது" என்ற பாசுரத்தாலும், "நின்றனரிருந்தனர்" என்ற பாசுரத்தாலும் அருளிச்செய்தார்.

கண்ணன் கீதையிலும் "மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ" "மயிஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ" என்று அருளிச்செய்தான். இதன்பொருளாவது — நூலிழையிற் கோக்கப்பட்ட ரத்னங்கள்போல எல்லா வஸ்துக்களும் என்னிடத்திலடங்கியிருக்கின்றன என்பதாம். இங்குக்கூறிய உவமைநயத்தால் சேதனாசேதனங்களாகிய வஸ்துக்களெல்லாம் * காரிய

---

§ நாமவனிவனுவனவளிவளுவளெவள்
தாமவரிவருவரதுவிதுவுதுவெது
வீமவையிவையுவையவைநலந்தீங்கவை
ஆமவையாயவையாய்நின்றவவரே.

அவரவர்தமதமதறிவறிவகைவகை
அவரவரிறையவரெனவடியடைவர்கள்
அவரவரிறையவர்குறைவிலரிறையவர்
அவரவர்விதிவழியடையநின்றனரே.

நின்றனரிருந்தனர்கிடந்தனர்திரிந்தனர்
நின்றிலரிருந்திலர்கிடந்திலர்திரிந்திலர்
என்றுமோரியல்பினரெனநினைவரியவர்
என்றுமோரியல்வொடுநின்றவெந்திடரே.

இவற்றின் பொருள்களாவன.— ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்களாகவும், போற்றதக்க வஸ்துக்களாயும், அழியும்பொருள்களாயும், நன்மையுடையவையாயும், அஃதில்லாதவையாயும், இறப்பெதிர் நிகழ்காலங்களையுடையவையாயும் ருக்கின்ற சேதனசேதனங்களின் ஸத்தையெல்லாம் ஈசுவராதீனமாயிருக்கின்றவென்றும், உலகில் காணப்படுகிற எல்லாத்தேவதைகளும் தம்மையடைந்தவர்களுக்குப் பலன்களைக்கொடுப்பதற்கு ஸர்வேசுவரன் அத்தேவதைகட்கு அந்தர்யாமியாக நிற்கின்றானென்றும் சேதனங்களின் நிற்றல், இருத்தல், கிடத்தல், திரிதல், நில்லாமை, இருக்காமை, கிடவாமை, திரியாமைகளாகிய பிரவர்த்தி நிவர்த்திகளும் ஈசுவராதீனமாயிருக்கின்றன என்பனவாம்.

* காரியமான நிலைமை—சிருஷ்டி காலம்.

மான நிலையிலும் ¶ காரணமாகிய நிலையிலும் அந்தராத்மாவாய் நிற்கும் ஸர்வேசுவரனுக்குச் சரீரங்களாகவிருக்குமென்பது பெறப்படுகிறது. இப்படி எல்லாம் அவனுக்குச் சரீரமாய் ப்ரகாரமாயிருக்கையாலே அவனே ஸர்வப்ரகாரமாயிருக்கின்றான். ஆனதுபற்றியே உலகத்தில் வழங்கும் எல்லா சப்தங்களும் அவனையே சொல்லுகின்றனவென்று அந்தந்த சப்தங்களைக்கொண்டு பரமாத்மாவைக் குறிக்கிறார்கள். அவர்கள் குறிக்கின்ற முறைபாவது.— மனுஷ்யனென்றால் மனுஷ்ய சரீரத்திற்கு அதிஷ்டாதாவான ஜீவனைக்குறித்து ஜீவனுக்கந்தராத்மாவான பரமாத்மாவை யுணர்த்துமென்பதாம். இதுபோல மற்றெல்லாமறிந்து கொள்க.

இப்படி எவ்வெப்பொருளைப்பார்த்தாலும் அவ்வப்பொருளெல்லாம் பரமாத்மாவையே விளக்கிநிற்குமென்ற உணர்ச்சி பரமவைதிக ஸித்தாந்த முணர்ந்தவரான பெரியார்கட்கே உண்டாகும். "வையதிகரண்யேநாநுபவாதபி பகவத் ப்ரகாரத்வேநைவ சாமாநாதிகரண்யேநாநுபவே போக்யதாப்ரகர்ஷோஸ்தி" என்றபடி * வையதிகரண்யத்தால் அநுபவிப்பதைக் காட்டிலும் † ஸாமாநாதிகரண்யாநுபவமானது மிகவும் இன்பமாயிருக்கும் மாணிக்கத்தையும் வயிரத்தையும் முத்தையும் ஓராரத்திலே சேர்த்து அநுபவிப்பாரைப்போலே உலகிற் காணப்படும் எல்லாப் பொருள்களையும் அவன் பக்கலிலே சேர்த்தநுபவிக்கும் அநுபவம் ஆழ்வார்கட்குண்டாயிற்று. இவ்வநுபவத்தாலன்றோ "நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றோராதார், கற்கின்றதெல்லாம் கடை" என்றும், "அவனே மற்றெல்லாமறிந்தனம்" என்றும் அருளிச்செய்தார்கள்.

இதனால் ஞானப்பெண் 'அபரிசுத்தையாகிய யான் விலகி நிற்றற்குரிய தூய்மையற்றதோரிடம் எங்கும் காண்கின்றேனில்லை' என்றதனால் ஆழ்வாருடைய ஞானத்தோடு இவளுடைய ஞானமும் ஒற்றுமையுற்றிருந்தமை யறியலாம்.

¶ காரணமான நிலைமை—லயகாலம்.

* வையதிகரண்யாநுபவமாவது.— ஜகத் பிர்ம்மம் என்பதில் ஜகத் வேறு, பிர்மம் வேறு என்றநுஸந்திப்பதாம்.

† ஸாமாநாதிகரண்யாநுபவமாவது.— ஜகத் பிர்ம்மம் என்பதில் ஜகத்தைச் சரீரமாகக்கொண்டுள்ள பிர்ம்மம் என்றநுஸந்திப்பதாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(146-ம் பக்கத்தொடர்ச்சி.)

"நான்காவது அதிகாரம்"

பால்ய லீலைகள்,

இந்தப் பிருந்தாவனம் ஜகத் சிருஷ்டியில் மிகவுஞ் சிறந்தவிடம். நறுமணம் வீசுகின்ற புஷ்பங்கள் நிறைந்த மரங்களால் அலங்கரிக்கப்பெற்றவையான இருகரைகளுடன் கூடியதும், குறுமணல் பரப்பியதும், மதுரமான ஓசைகள் நிறைந்ததுமான யமுனைத்தலத்தில் குயில்மயில்களின் த்வனிகளால் நிறைந்த லதாகிருகங்கள் நிரம்பியதும், கோபபாலர்களின் வேணு ரவத்தால் காதுகளுக்கு ஆனந்தம் தரக்கூடியதும், எண்ணற்கரிய மலர்களின் மணத்தால் நாலா பக்கமும் கமழ்வதும், ஆடையாபரணங்களா லலங்கரிக்கப்பட்டவர்களாய் கருத்து நீண்ட நயனங்களுடையவர்களாயுமுள்ள வ்ரஜ ஸுந்தரீகளால் அலங்கரிக்கப்பெற்றதுமான இப்பிருந்தாவனத்தை மனதில் நினைத்தமாத்திரத்தில் ஹ்ருதயம் மலருகிறது. இவ்விதமாக வர்ணனையில் காலங்கழிப்பது நமது உத்தேசமில்லை நாம் பெரிதான தத்வத்தைப் பராமர்சிப்பதில் தற்காலம் பிரவர்த்தித்திருக்கிறோம்.

பாகவதங் கூறுவதாவது.— பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மூன்று அசுரர்களை வதைத்தார். வத்ஸாசுரன் 1, பகாசுரன் 2, அகாசுரன் 3 இவர்களில் முதலோன் கன்று வடிவு கொண்டவன், மற்றையன் பறவையுரு கொண்டவன். கடையோன் அரவுருபம் எடுத்தவன். கோபர்களுக்குத் தீங்குவிளைத்துவந்த இம்மூவரையும் பலவானுன ஸ்ரீ கிருஷ்ணன் வதம் செய்தாரென்பது பொருந்தும். ஆனால் இம்மூன்றுவிஷயங்களில் ஒருகதையாவது விஷ்ணுபுராணத்திலும், மகாபாரதத்திலும், ஹரிவம்சத்திலும் காணப்படவில்லை. ஆதாரமற்றவைகளானதால் இம்மூன்று அசுரவிருத்தாந்தங்களும் நம்மால் ஏற்றுக்கொள்ள வியலாது.

இக்கதைகளில் வேறு தத்வங்கள் அடங்கியிருக்கின்றன. "வஹி" தாதுவிலிருந்து வத்ஸ, "வக" தாதுவிலிருந்து வக, "அவ" தாதுவிலிருந்து அக வென்னும் பதங்கள் வந்தன. "வஹி" தாது விற்குப் பிரகாசித்தல் அர்த்தம். "வக" தாதுவிற்கு கௌடில்யம் அர்த்தம். கௌடில்யம் கெடுதி செய்தல். அகி தாதுவிற்குப் பாபமர்த்தம். எவன் வெளிப்படையாய் நிந்திக்கிறானோ அவன் வத்ஸன். கெட்டவழியில் நடப்பவன் பகன். பாபியானவன் அகன். ஸ்ரீ கிருஷ்ணபகவான் இளமைப்பருவத்திலேயே இம்மூன்றுவித ஆத்மசத்ருக்களையும் திரஸ்கரித்து ஜயிட்டித்தார். யஜுர்வேதத் தில் அக்நி சயனத்தில் 70 கண்டிகையில் அடியிற்கண்டமந்திரமானது இவ்விதச் சத்ருக்களை விலக்கவேண்டுமென்று பிரார்த்தனாரூபமாய்க் காணப்படுகிறது. "ஓ அக்நியே! எவர்கள் எங்கட்குச் சத்ருக்களோ, எவர்கள் எங்களை நிந்திக்கிறார்களோ, எவர்கள் எங்களை த்வேஷிக் கிறார்களோ, எவர்கள் எங்களைக்கொல்ல விரும்புகிறார்களோ இப் பேர்ப்பட்ட நான்குவிதச் சத்ருக்களையும் எரித்துச் சாம்பலாக்கு வீராக" இம்மந்திரார்த்தத்தை மனதில் கருதியே பாகவத மியற்றிய வர் இவ்வசுரரின் கதைகளைக் கற்பனை செய்தார்போலும்.

மேலும், பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது.— கிருஷ்ணனைப் பரீக்ஷை செய்வதற்காகப் பிர்ம்மாவானவர் மாயையினால் இடைச் சிறுவர்களையும் பசுக்கன்றுகளையும் எடுத்து ஒளித்து விட்டார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் தானே சிறுவர்களையும் கன்றுகளையும் சிருஷ் டித்து முன்போல் அவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். இக்கதையின் தாத்பரியமாவது ஸ்ரீகிருஷ்ண மகிமை பிர்ம்மாவானுங் கூட அறியமுடியாது என்பதே.

ஸ்ரீ கிருஷ்ணன் அதற்குப்பிறகு ஒருநாள் காட்டுத்தீயின் ஜ்வாலைகள் யாவையும் பானஞ்செய்தார். சைவர்கள் நீலகண்டர் காலகூட விஷத்தைப் பானஞ்செய்தாரென்று சொல்லியிருப்பதால் வைஷ்ணவ சூடாமணியான பாகவதக்காரர் அதற்குப் பதிலாக ஸ்ரீ கிருஷ்ணபகவான் அக்நி ஜ்வாலையைப் பானஞ்செய்தாரென்று சொன்னாரென்று தோன்றுகிறது. இவ்விடத்தில் காளியதமன கதை சொல்லவேண்டியதவசியம். மஹாபாரதத்தில் இக்கதை குறிக்கப்

படவே இல்லை. ஹரிவம்சத்திலும், விஷ்ணுபுராணத்திலுமிருக்கிறது. பாகவதத்தில் மிகவும் விஸ்தரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கதையில் நடக்கவியலாத சங்கதிகள் நிரம்பியிருக்கின்றன. இதிலொரு மனோகரமான உருவகம் இருக்கிறது.

கதையாவது.— யமுனையில் ஓர் மடுவில் காளியனென்ற கொடும் விஷமுள்ள சர்ப்பமானது தனது பரிவாரங்களுடன் வசித்துவந்தது. அதற்கு அநேகம் முடிகள் (படங்கள்) உண்டு. விஷ்ணுபுராணத்தில் மூன்று என்றும், ஹரிவம்சத்தில் ஐந்தென்றும், பாகவதத்தில் 1000, என்றும் அதின் முடிகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அப்பாம்பின் விஷக்கொடுமையால் அவ்விடத்தில் புல்பூண்டு முதலியவைகளுண்டாவதில்லை. அதினருகில் எவராலும் செல்லமுடியாது. மேலே பறக்கும் பறவைகளின் சிறகுகள் விஷத்தீயால் கருகி அப் பறவைகள் அந்த மடுவில் விழுந்து மூழ்கி மாண்டன. யமுனையின் நீர் விஷமயமாகினதால் அந்த நீரைப் பருகிக் கோபர்களும் சிறுவர்களும் பசுக்களும் கன்றுகளும் உயிர் விட்டனர்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இக்கெடுதியை நீக்க ஒருநாள் திடீரென்று மடுவில் குதித்தார். குதித்து அவ்வரவின் படத்திலேறி நர்த்தனஞ்செய்தார். அதை சகிக்கமுடியாமல் அப்பாம்பு விழிகள் பிதுங்கியும் வாய்களிலிருந்து விஷத்தையும் ரத்தத்தையும் கக்கியும் சாகுந்தருவாயிலிருந்தது. அதைக்கண்டு சகிக்காமல் அப்பாம்பின் பத்தினிகள் மானிட மாதர்களின் உருக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பலவாறாகத் தோத்தரித்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவர்கள்பால் கருணை கூர்ந்து அந் நாகத்தை அவ்வளவோடுவிட்டு அதைப் பரிவாரத்துடன் சமுத்திர மேகக் கட்டளையிட்டருளினார். அவ்வரவும் தனது மனைவிமக்களோடும் சுற்றத்தாரோடும் இந்த யமுனையை விட்டகன்று கடல் சென்றது. அதுமுதல் யமுனையும் சுத்தமாயும் மதுரமாயுமுள்ள ஜலம் நிரம்பியதாயிற்று. உபந்யாஸம் இத்தன்மை தயதாயிருக்கிறது. இதன் மத்தியில் ஒரு ரூபகம் காணப்படுகிறது. மதுர சப்தம் நிறைந்ததும் கருப்புநிறமுள்ள நீர்வாய்ந்ததுமான காளிந்தீ இருள் நிரம்பியதாயும் கோர சப்தமுள்ளதாயுமுள்ள நதீ காலப்பிர

வாஹமே. இதன் மத்தியில் பயங்கரமானதோர் சுழல் இருக்கிறது. நாம் எதை துக்கமயமென்றும், ஆபத்தென்றும் மனதில் கொள்கிறோமோ அதுதான் கால வெள்ளத்தின் சுழல். மிகவும் பயங்கரமானவையும் விஷயமானவையுமான மனுஷ்ய சத்ருக்கள் எல்லாம் இச்சுழலில் மறைந்துகொண்டு வசிக்கின்றன. அரவுமாதிரியவர்கட்கு மறைவான இருப்பிடம். அரவுமாதிரியவர்களுக்குக் குடில் நடை அரவுபோலவர்களுக்கு அதிக விஷம். ஆதிபௌதிகம் ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் இம்மூன்று விசேஷங்களுமே இவ்வரவின் மூன்று முடிகள். நமது இந்திரியங்கள்மூலமாய் நமக்குச் சகல அநர்த்தங்களு மேற்படுகின்றனவென்று நாம் மனதில் கருதினால் இப்பஞ்சேந்திரியங்களுமே இவ்வரவின் ஐந்து தலைகளெனக் கொள்ளலாம்.

இவ்விதம் நம்முடைய அமங்களங்களுக்கு எண்ணிறந்த காரணங்களிருக்கின்றனவென்று நினைத்தா லவைகளே அவ்வரவின் ஆயிரந் தலைகள். நாம் கோரமான விபத்தாகிற சுழியில் இவ்வரவின் வசமாகவானோமானால் ஜகதீசுவரனின் பாதபத்மத்தைத்தவிர நமக்குத் தப்புவதற்கு வேறுவழியு முண்டோ? கிருபா மூர்த்தியான ஈசுவரர் இப்பாம்பைக் காலால்மிதித்து மனோகரமான அவரது மூர்த்தியை விகாசப்படுத்தி அபயமாகிற புல்லாங்குழலைவாசித்து நம்மைக் கடைத்தேற்றிவிடுகிறார். புல்லாங்குழலின் த்வனியைச் செவியுற்று ஜீவன் சம்ஸாரயாத்திரையைச் சிரமமின்றி நடத்துகிறான். கோர சப்தமுள்ள காலப்பிரவாகமானது அப்பொழுது தெளிந்த நீருள்ளதாகிறது. இக்காலவெள்ளத்தில் சுழலின் மத்தியில் அமங்களரூபமான அரவின் முடியிலேறி நடித்த அபயவம்சீதரனை மூர்த்தியானது புராணக்காரர்களின் சமத்காரமான கல்பனை. இவ்விதமாக மனதிற்கருதி ஈசுவரனைப் பூஜைசெய்வோமானால் நம்மைப் பரிகசிக்க எவர் துணிவார்?

தேனுகாசுரன், ப்ரலம்பாசுரன் இவர்களையழித்த விருத்தாந்தங்களைக்குறித்து நாமொன்றும் விசேஷமாய்க் கூறவில்லை. ஏனெனில் இவை பலராமனால் செய்யப்பட்டன. வஸ்திரக்கிரகண சம்பந்தமாய்க்கூறவேண்டியதை மற்றோரதிகாரத்தில் கூறுவோம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

திருமாலிருஞ்சோலை.

எம்பெருமான் அடியார்கள் உய்யுமாறு கொண்டருளிய பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சையென்னும் ஐவகை நிலையுள்ளும் நம்போன்ற சாமான்யர்களும் எளிதிற்சேவித்துப் பயனடையுமாறு அமைந்தது அர்ச்சையென்னும் நிலையே. மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களும் மிகவும் ஈடுபட்டனுபவித்தருளியதும் இந்நிலையையே "ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே" என்று லோகதேசிகன் அருளிச்செய்ததும் இங்கு நோக்கத்தக்கது. "மாண்டு பிறக்குந் துயர்போய் வைகுந்தம் புக்கவரும், மீண்டு தொழக்காதலிக்கும் வேங்கடமே" என்றவாறு முக்தர்களும்கூட அவ்வைகுந்தத்தினின்று இழிந்து இவ்வெம்பெருமானைத் தொழவிரும்புவர் எனின் இதன்பெருமை நம்மாற்சொல்லும் தரத்ததோ!

இத்தனையேற்றமுடைய அவ்வர்ச்சாமூர்த்தி கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசங்கள் பலவற்றுள் தலைசிறந்த பெருமையுடையவை * கோயில் திருமலை † பெருமாள்கோயில் என்னும் மூன்றுமேயாம். அம்மூன்றனுள் திருமலை என்பது வடமலையாகிய திருவேங்கடத்தையும் தென்மலையாகிய திருமாலிருஞ்சோலையையும் குறிக்கும். இக்கருத்தினை,

"தேனோங்குநீழற்றிருவேங்கடமென்றும்
வானோங்குசோலைமலையென்றும்—தானோங்கு
தென்னரங்கமென்றுந்திருவத்தியூரென்றுஞ்
சொன்னவர்க்குமுண்டோதுயர்."

என்னும் செய்யுளில் பாரதம்பாடிய பெருந்தேவனார் என்னும் பெரியார் கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்ற வழக்கினையே கருத்திற்கொண்டு திருமலை யென்பது திருவேங்கடம்,

---

* கோயில்—திருவரங்கம்.

† பெருமாள் கோயில்—காஞ்சீபுரம்.

திருமாலிருஞ்சோலை என்ற திருமலைகளிரண்டையுங் குறிக்குமென்றதனை வற்புறுத்தவே திருவேங்கடத்தை யடுத்துத் திருமாலிருஞ்சோலையை வைத்தெண்ணினர்.

* "தென்னனுயர்பொருப்புந்தெய்வவடமலையும்
என்னுமிவையேமுலையாக"

† "சோதிமதிவந்துதவழ்சோலைமலையோடிரண்டாய்
மேதினியாள்கொங்கைநிகர்வேங்கடமே"

† "வடமலை தென்மலை கச்சி குறுங்குடி" § "திருவழுதிவளநாட்டுள்ள, தீர்த்தமுழுவதுமாடி யன்பாற்றென்பாற்றிருமலையுங் கைதொழுது சிந்தித்தானே" என்னும் வழக்குகளும் இதனை வலியுறுத்தாநிற்கும். ¶ "திருமலையதுவே யடைவதுதிறமே" என்னுங்காண்க. இத்திருமலை திருமால் குன்றம் இருங்குன்றம் திருமாலிருஞ்சோலைமலை அழகர்திருமலையென்று பண்டையோரால் வழங்கப்பெற்றுள்ளது.

ஆழ்வார்களிற் பெரும்பாலோர் மற்றத் திவ்யதேசங்களைக் காட்டிலும் இதிற் பெரிதும் ஈடுபட்டுள்ளார். பண்டைத்தமிழ் நூல்களிற் சிலப்பதிகாரம் பரியாடல் முதலிய நூல்களில் இம்மலைச் சிறப்புப் பெரிதும் விரித்துக் கூறப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் இத்தலத்தைப்பற்றி மற்றை நூல்களிற் காணப்படாத ரகஸ்யங்கள் பல அறியக்கிடத்தலின் அதனைச் சிறிதாராய்வதாயிற்று.

சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தி என்னும் மூவரும் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் வழிக்கொண்டு உறையூரை யடைந்து ஆண்டிராத்தங்கித் தென்றிசை மருங்கிற் செலவு விருப்புற்று % வைகறை யாமத்து ⚘ வாரணங்கழிந்து வெய்யவன்

---

* பெரியதிருமடல்.

† அழகியமணவாளதாசர்.

§ வில்லிபுத்தூரார் பாரதம்.

¶ திருவாய்மொழி.

% வைகறை—விடியற்காலம்.

⚘ வாரணம்—கோழி. இங்கு உறையூர். முன் ஒரு கோழி ஓர் யானையை வென்ற இடமாதலின் இப்பெயர் பெற்றது. "முறஞ்செவிவாரணம் முன்சமமுருக்கிய, புறஞ்சிறைவாரணம்" என்றதுங் காண்க.

குணதிசைத்தோன்ற ஆங்கிருந்தோர் வளநீர்ப்பண்ணையும் வாவியும் பொலிந்த இளமரக்கானத்திருக்கை யெய்தியிருந்தனர். அப்பொழுது "வாழ்கவெங்கோ மன்னவர் பெருந்தகை, ஊழிதோறூழி யுலகங்காக்க" என்று பாண்டியனைப் பலவாறு வாழ்த்திக்கொண்டு ஆண்டுவந்திருந்த முதிய மறையோனைக்கண்டு அவனை நோக்கி நும்மூர் யாது? இங்குநும்வரவு என்னை? என்று கோவலன் வினவினன். அதுகேட்ட மறையோன்; * நீலமேகமொன்று உயர்ந்த பொன்மலையின்மீதே பக்கங்களில் மிகாமல் ஒக்கப்படிந்ததுண்டாகில் அதனையொப்பத் தனது படம் விரித்தெழுந்த ஆயிரந்தலைகளையும் கிட்டுதற்கரிய வலியினையுமுடைய பாம்பணைப்பள்ளிமீதே தேவர் பலருந்தொழுதேத்த அலைவிரியும் காவிரியாற்றிடைக்குறையிலே திருமகள் பொருந்திய திருமார்பையுடையோன் கிடந்த திருக்கோலத்தையும், கொடிவழித் தீர்த்த முதலிய மிக்க அருவிநீரையுடைய திருவேங்கடமென்று கூறப்படும் உயர்ந்த மலையின் உச்சிமீதே ஞாயிறுந் திங்களும் இருமருங்கும் ஓங்கிவிளங்கிய நடுவிடத்தே நல்ல நீலநிறமுடைய மேகமொன்று தன் மின்னாகிய புதுப்புடவையை யுடுத்துத் தன் வில்லாகிய பணியைப்பூண்டு நின்றாற்போலப் பகையை வருத்தும்திருவாழி திருச்சங்குகளை அழகிய தாமரைக் கையின்கண் வலமுமிடமும் ஏந்தி அழகுமிக்க ஆரத்தைத் திருமார்பிற்பூண்டு பொற்பூவாடை யுடுத்துத் தோன்றியருளிய சிவந்த திருக்கண்மலரையுடைய நெடியோன் நின்றதிருக்கோலத்தையுங் காட்டுவாயாக என்று என்

---

* நீலமேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த

விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை

விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்

கண் என்னுள்ளத்தைக் கவலை செய்தலாலே இங்குவந்தேன். குடக மலைப் பக்கத்து மாங்காடென்னு மூரின்கண்ணுள்ளவன் நான். பாண்டிநாட்டுச் சிறப்புக்களையும் அவனது கொடை அளி முதலிய செல்வங்களையும் கண்குளிரக்கண்டேனாதலின் அவன் புகழை வாழ்த்திக்கொண்டு வந்திருந்தேன். இதுவே எனது வருகையென்று அம்மறையோன் சொல்லக்கேட்டுக் கோவலன், பெரிய மறை முதல்வனே! மதுரைக்குச் செல்லும் செவ்வியநெறியை எங்கட்குக் கூறுவாயென, அவனும் "நானிலம்வாய்க்கொண்டு நன்னீரறமென்று கோதுகொண்ட, வேனிலஞ்செல்வன் சுவைத்துமிழ்பாலை" என்றவாறு இக்கொடும்பாலையில் இம்மிக்க கடுங்கோடையில் இவ்வழகிய நங்கையோடும் வந்தீர் நீர் என்று வருந்திப் பின்னும் அவர்களை நோக்கி, பாறையும் துறுகல்லும் அருவழியின் நெறிமயக்கமும் † பேய்த்தேரு மென்னுமிவை அடைவுபடக்கிடந்த இத்தொலையாத பெரிய காட்டுவழியைத் தொலைத்துச்சென்று கொடும்பாளூர் நெடுங்குளமென்னும் இரண்டூர்க்கும் பொதுவாகிய ஏரிக்கரையைத் தாண்டிச்சென்றால் பிறையை முடியிற் கண்ணியாகச்சூடிய ஈசனேந்திய சூலவேல்போல மூன்று வழிகள் அரிதற்கரியவாம்படி பிரிந்து செல்லும்.

அவற்றில் வலப்பக்கத்து வழியே செல்லத் துணிவீராயின் பல வகையாகிய பாலை வழிகளைக்கடந்துசென்றால் அங்கு மலைநெல்லும்,

---

பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரா மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய

செங்கணெடி யோன் நின்ற வண்ணமும்
என்கண்காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்

* * * * * * * * * * *

திருமால்குன்றத்துச் செல்குவீ ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு மாயிற்

† பேய்த்தேர்—கானல்.

கரும்பும், தினையும், புனவரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும் அழகியகொடியையுடைய கவலையும், வாழையும், கமுகும், தெங்கும், மாவும், பலாவுஞ் சூழ்ந்தோங்கிய பாண்டியனது சிறுமலை விளங்கித் தோன்றுநிற்கும். அதனை வலங்கொண்டு இடப்பக்கத்து வழியிற் சென்று மதுரையிற் புகுமின் அவ்வாறு வலப்பக்கத்து வழியிற் செல்லாது இடப்பக்கத்து, வண்டுகள் செவ்வழிபாடும் தடமும் வயலும் குளிர்ந்த சோலையும் அருஞ்சுரங்கள் பலவும் பொருந்திய காட்டுவழியைக் கடந்து திருமால் குன்றத்துச் செல்வீராயின் அவ்விடத்து மிக்க மயக்கத்தைக் கெடுக்கும் பிலத்துவழியுண்டு. அதனுள் தேவர்கள் துதித்தலால் யாவராலும் வியக்கத்தக்க தன்மையையுடைய புண்ணிய சரவணம் பவகாரணி இட்டசித்தியென்னும் பெயர் எங்கும் பரக்கப்பட்டு இடையறாத சிறப்பினையுடையவாய்த் தம்மிற் சேர்ந்திருக்கின்ற மூன்று பொய்கைகள் உள்ளன. அவற்றுள் புண்ணியசரவணமென்னும் பொய்கையிலாடுவீராயின் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணமென்னும் இலக்கணத்தை உணர்வீர். அன்றிப்பவகாரணியென்னும் பொய்கையிலாடுவீராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய பழம் பிறப்பையுணர்வீர். அதுவன்றி இட்டசித்தியென்னும் பொய்கையில் ஆடுவீராயின் நீர் நினைத்தவெல்லாம் பெறுவீர். அங்ஙனமாகிய பிலத்துட் புகவிரும்புவீரேல்

புண்ணிய சரவணம் பவகா ரணியோ
டிட்ட சித்தி யெனும்பெயர் போகிய
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள வாங்குப்
புண்ணிய சரவணம் பொருந்துவீ ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்
பவகா ரணிபடிந் தாடுவீ ராயிற்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவிர்
இட்ட சித்தி யெய்துவி ராயின்
இட்ட சித்தி யெய்துவிர் நீரே
ஆங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்
ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையி லவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்

மிகவு முயர்ந்த அத்திருமலையின்கண் எழுந்தருளிய பெரியோன் சேவடிகளைக் கையிற்றொழுது மனத்தானினைந்து வாக்காற்றுதித்த வுடனே அம்மலையை மும்முறை வலம் வந்தால் பூமிபிளக்கும்படி வீழ்ந்த சிலம்பாறென்னும் பேராற்றினது கரைக்கண்ணுள்ள பொலிவுடைய முகைகளவிழ்ந்த மலர்களையுடையதோர் கோங்கின் நிழலில் ஓர் பொற்கொடிபோலவும் மின்னல்போலவும் மேகம் போன்ற ஐவகைக் கூந்தலையும் வளைபுனைந்த தோளினையுமுடையா ளொருத்திதோன்றுவாள். அங்ஙனம் தோன்றியவள் இப்பிறப்பிற் கின்பம்யாது? மறுபிறப்பிற்கின்பம்யாது? இவையிரண்டுமின்றி எக் காலத்தும் ஒருபடித்தாய்க் கோட்டமின்றி அழிவறநிற்கும் இன்பம் யாது? இவற்றை நீர் கூறுமின்! யான் இத்தாள்வரைக்கண் வாழ் வேன். வரோத்தமை யென்றழைக்கப்படுவேன். யான் வினவிய இவற்றை உரைத்தாருளராயின் அவர்க்கு எத்தொழிற்கு முரி யேன். ஆதலின் திருத்தக்கீர்! இவற்றை உரைத்திராயின் உமக்கு இப்பொழுதே இப்பிலவாயிற் கதவைத்திறந்து தருவேனென்று சொல்லுவள். அவள் வினக்கட்கு விடையிறுப்பின் அவள் கதவைத் திறந்து காட்டிய நல்லவழியில் நெடிய இடைகழிவாயில்கள் பலவுள.

நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தற்
கடிமல ரவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி
யிம்மைக் கின்பமு மறுமைக் கின்பமும்
இம்மையு மறுமையு மிரண்டு மின்றியோர்
செம்மையி னிற்பதுஞ் செப்புமி னீயிரிவ்
வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பேன்
உரைத்தார்க்குரியே னுரைத்தீ ராயின்
திருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவெனும்
கதவந் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டத னும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
இறுதியி லின்ப மெனக்கீங் குரைத்தாற்
பெறுதிர் போலுநீர் பேணிய பொருளெனும்

அவற்றைக்கடந்தால் இரட்டைக் கதவுடையதோர் வாயிலொன்றுண்டு. அதற்கு மேலேசென்றால் சித்திரப்பாவைபோல் வாளொருத்திவந்துதோன்றி "ஈறில்லாத இன்பம்யாது? அதனை உரைத்திராயின் நீர் இம்முப்பொருளினும் விரும்பிய பொருளைப்பெறுவீர். உமது பேதமையான் வினவியதனை உரையீராயினும் உம்மை வருத்தஞ்செய்யேன். நீர்போகவேண்டிய நெடுவழிக்கண்ணே உம்மைப் போக்குவேன் என்பள். அவள்கேட்டபொருளை உரைத்தாருளராயின் முற்கூறப்பட்ட மூன்று பொய்கைகளின் கரைக்கு அழைத்துச் சென்று அவற்றைக் காட்டிமீளுவள்.

அங்ஙனம் அவள் காட்டிய மூன்றில் நீர் விரும்பிய தொன்றில் ஓதுதற்கும் உரைத்தற்கும்அரியமறையிடத்துள்ள ஐந்தும் எட்டுமாகிய எழுத்துக்களையுடைய மந்திரமிரண்டையும் ஒரு தன்மையாக மனத்தானினைந்து வாக்கால் துதித்து நீர் விரும்பியாடின் அவற்றின்பயன் தவங்களைச்செய்தோர்க்கும் காணத்தக்க மரபுடையனவல்ல. நீர் அப்பொய்கையின் பயனை விரும்பீராயின் அவற்றை நினையாது அம்மலைமீது நின்றருள்வோனது பொலிவுடைய

உரையீ ராயினு முறுகண் செய்யேன்
நெடுவழிப் புறத்து நீக்குவ னும்மெனும்
உரைத்தா ருளரெனி னுரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரும்
அருமறை மருங்கி னைந்ினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டும்
ஒருமுறை யாக வுளங்கொண் டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினீ ராடிற்
காண்டகு மரபின வல்லமற் றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்று மரைத்தா ளுள்ளம் பொருந்துமின்
உள்ளம் பொருந்துவீ ராயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடிப் புணர்நிலை தோன்றுந்
தோன்றிய பின்னவன் றுணைமலர்த் தாளிணை
யேன்றுதுயர் கெடுக்கு மின்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்.

தாமரைமலர்போன்ற பாதங்களை மனத்தால் நினைமின். அவ்வாறு நினைப்பீராயின் அப்பொழுதே அவனது கருடப்புள்ளெழுதிய கொடிமரம் பொருந்திநிற்கும் நிலையிடத்தைக்காண்பீர். கண்ட வளவில் அவன் திருவடிநிலை உம்மை எடுத்துக்கொண்டு பிறவித் துன்பத்தைக் கெடுக்கும். அங்ஙனம் அது கண்டதனாற் பின்னர்ப் பரமபதமடைதலு மெய்யென்றின்பமுற்று மாட்சிமை பொருந்திய மதுரைக்குச் செல்லுமின். கண்கூடாகக் காணத்தகும் பிலத்தின் தன்மை இது. இத்தன்மையவாகிய இரண்டுபக்க வழிகளிற் செல்வீராயின் இடைப்பட்டவழி செவ்வியவழி. அதன்கண் இனிய சோலை சூழ்ந்த ஊர்களையும் ஊர்கள் இடையிட காடுகளையுங்கடந்து சென்றாற் கடத்தற்கரியதோர் நெடுவழிக்கண் மிக்க துயரத்தைத் தருவதோர் தெய்வமுண்டு. அது தோன்றி வழிப்போவாரைத் துன்பஞ்செய்யாது. பின் செய்வதியாதெனின் நடுக்கமற்ற தன்மையாற்செல்லுவார் செலவைத்தடுக்கும். அத்தன்மைத்தாகிய அதனைத் தாண்டின் அப்பெருவழி செல்வார்யார்க்கும் முகஞ்செய்து கிடக்கும். ஆதலால் நீவிருஞ்செல்மின். யானும் நிலங்கடந்த நெடுமுடியண்ணல்தாள்களைத் தொழுந்தகையுடையேனுதலிற்செல்வேன். என்று அவர்பால் விடைபெற்றுச் சென்றனன்.

இங்ஙனம் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இப்பழம்பதியின்பெருமை மதச்சார்பற்ற சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகளால் விவரித்துக் கூறப்படுகின்றது. பரிபாடலில் பதினைந்தாம் பாடலாகிய இளம்பெருவழுதியாரியற்றிய செய்யுளும் எல்லாமலைகளுள்ளும் இவ்விருங்குன்றம் சிறந்ததென்று அழகுற எடுத்துக்காட்டியும், சிலம்பாற்றினாற் பொலிவு பெற்றுள்ள அம்மலைவளத்தை விரித்துரைத்தும். அதிலெழுந்தருளியிருக்கும் கண்ணனும் பலதேவரும் உருவினாலிருவரேனும் செய்கையால் ஒருவரே என்பதனை உவமையால் விளக்கிக்காட்டியும் அம்மலை திருமால்போன்று தன்னைத்தரிசித்தோரது மயக்கத்தையொழிப்பது. ஆகையால்நீர் சென்றாயினுந் தெரிசித்தாயினும் திசைநோக்கியாயினும் வழிபடுமினென்று உலகினர்க்கறிவுறுத்தியும் அத்திருமலையடியில் உறைதலே தமக்குறுதியென்று முடித்துத் தமக்கு அத்

திருமலையிலுள்ள ஈடுபோட்டை வெளியிட்டும் அழகுபெற முடிக்கப்படுகின்றது.

இங்ஙனமிருக்கவும் இத்தலத்தினைத் தேவதாந்தர ஸம்பந்தமுடையதாகச் சிலர் கூறப்புகுவது விந்தையே! இக்கூற்றுக்குக் காரணம் பெரும்பாலும் "பழமுதிர்சோலைமலை கிழவோனே" என்ற திருமுருகாற்றுப்படையடியும் திருப்புகழ்ப் பாடல்களுமேயாம். ஆயினும் அவ்வடிக்கு உரைவகுத்த நச்சினார்க்கினியார் மற்றைத் தலங்களைப்பற்றிக் கூறுவதுபோல விவரணமொன்றுங் கூறாது "பழம் முற்றினசோலைகளையுடைய மலைக்கு உரிமையுடையோன்" என்று மாத்திரங்கூறி விடுத்ததுபொதுவாய் மலைக்குரியவன் (குறிஞ்சி நிலமுடையான்) என்பதே அவ்வடியின் கருத்தென்பதனைப் புலப்படுத்தாநிற்கும், அருணகிரியார் கூற்றும் மேற்காட்டிய அடியைப் பின்பற்றியதே யாதலின் ஈண்டாராய்தல் வேண்டாவென்க.

ரே. இராமையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

ஸ்ரீ:

பக்தி நிரூபணம்.

[இது ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(181-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்படியிருந்துள்ள பக்திகார்யமாயேற்படுகிற காணசைதல்யத்தாலும், அதனாலேற்படுகிற தரியாமையாலும் உபாயாந்தராநுஷ்டான சக்தியேற்பட்டு ஈசுவரனே உபாயமாகப் பற்றுகையாகிற ப்ரபத்தியேற்படும். இந்த விஷயம், "ஸ்வஸுகே ஸ்வநிஷ்டா ஜமதி மதிமதாம் அவிதேஷாம்" "ஸ்வபக்ஷை: ஸ்ருத்வா ஜகதி கதிமந்யாம்

அவிதுஷாம்'' என்கிற பட்டருடைய ஸ்ரீ ஸூக்தியாலும், இதற்கு மூலமான ''ஐதம் ஶரணமஜ்ஞாநாம்'' ''இதம் சரணம் அஜ்ஞாநாம்'' என்கிற ஜிதந்தா வாக்யததாலும் வ்யக்தமாகிறது. இப்படி ப்ரபத்திக்குக் காரணபூதமான பக்திஸ்வரூபமும் நிரூபிக்கப்பட்டது.

கீழ் நிரூபித்தபடி ஆழ்வாருடைய பக்தி ஸாதநபூதபக்தி வ்யாவ்ருத்தையாயும் ப்ரபத்தி பலபூதபக்தி வ்யாவ்ருத்தையாயுமிருக்கும். ஸாதநபூதையான பக்தி அங்காநுஷ்டாநமூலகிருதி ஸாத்தியையாயிருக்கும். பலபூதையான பக்தி சரணாகதி பலமாய் தேஹாவஸாந ஸமயத்தில் வரககடவதாயிருககும்.

ஆழ்வார்களுடைய பக்தி அஜ்ஞானஸித்தையாய் அநேகாவஸ்தாபேதங்களைப் பிறப்பித்து ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களிலே அபிவ்ருத்தையாயிருக்கும்.

இந்த விஷயம் ஆசார்யஹ்ருதயத்தில், ''ஜந்மாந்தர ஸஹஸ்ர நற்றவங்களாலே'' என்கிற சூர்ணையில் வ்யக்த்தமாக ப்ரதிபாதிக்கப்பட்டது. இதுவுமன்றி இதனுடைய அவஸ்தாவிசேஷங்கள் ஈசுவரனுக்கு அநுபாவ்யங்களாய் அவனாலே ஏற்படுகின்றன என்னுமது, ''பெரும்பாவிக்ஷேத்ரஜ்ஞன்'' என்கிற சூர்ணையாலே ப்ரதிபாதிக்கப்பட்டது. அந்த அர்த்தம் ஸங்கிரஹேண நிரூபிக்கப்படுகிறது. அதாவது,— ''பக்தியுழவன்'' என்றும், ''தம்க்ஷாம்க்ஷேக்ருஷீவலம்'' ''தம்த்வாம்க்ஷேமக்ருஷீவலம்'' என்றும், ''வ்ருஷஶைலேஶக்ருஷீவலம்'' ''வ்ருஷசைலேசக்ருஷீவலம்'' என்றும் சொல்லப்படுகிற கர்ஷகஶ்ரேஷ்டனான ஸர்வேசுவரன், லீலாவிபூதியில் க்ஷேத்ரஜ்ஞனுடைய மனஸ்ஸாகிற க்ஷேத்திரத்தைச் செய்காலாகத்திருத்தி அதில் பக்தியாகிற விதையை விதைத்து அது பயிராகிப்பலித்தபிறகு அந்த பலத்தைத் தான் அநுபவித்து திருப்தனாகிறான் என்றும், கர்ஷகனானவன் தன்னாலுண்டாக்கப்பட்ட ஸஸ்யங்களுடைய தத்தத்காலகுணங்களான அவஸ்தாவிசேஷங்களை அநுபவித்து த்ருப்தனாகிறாப்போலே ஈசுவரனாகிற கர்ஷகனானவன், பக்தியினுடைய அவஸ்தாபேதங்களையுண்டாக்கி அந்த அவஸ்தைகளைத் தான் அநுபவித்து த்ருப்தனாகிறான்.

இந்த விஷயத்தை தேசிகன் "𑌸𑌮𑌯𑍋𑌪𑌨𑌤𑍈𑌃 𑌤𑌵𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑍈𑌃 𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇 𑌕𑍃𑌤𑌸𑌮𑍍𑌪𑍍𑌲𑌵𑌾𑌧𑌰𑌿𑌤𑍍𑌰𑍀 ‖ 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌸𑌸𑍍𑌯𑌮𑌾𑌲𑌿𑌨𑍀𑌯𑌂 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑍇𑌶 𑌕𑍃𑌷𑍀𑌵𑌲𑌂 𑌧𑌿𑌨𑍋𑌤𑌿" "ஸமயோபநத்யை: தவப்ரபாவை: அநுகம்பே க்ருதஸம்ப்லவாதரித்ரீ, சரணாகதஸஸ்ய மாலிநீயம் வ்ருஷசைலேச க்ருஷீவலம் திநோதி" என்று அருளிச்செய்தார். (இதற்கு அர்த்தம்) (தயைப் பார்த்து ஸாதிக்கிற சுலோகமிது) அந்தந்த ஸமயங்களில் ஏற்படுகிற உன்னுடைய ப்ரபாவங்களாலே பூமியானது ஆர்த்திரதையை யடைந்து அதனால் சரணாகதர்களாகிற பயிர்களுண்டாகி அதனால் அலங்கிருதையாயிருந்துகொண்டு திருமலையாகிற உத்துங்கஸ்தானமாகிற பரணில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேசுவரனுக்கு த்ருப்தியை உண்டாக்குகிறது என்று".

மேலும் காமுகனாயிருக்கிறவன் காமினியை அலங்கரித்து அந்த அலங்கிருதையான காமினியைப் பார்த்து ஸந்துஷ்டனாமாப் போலே ஸர்வேசுவரனும் மஹா காமுகனாகையாலே காமிநீஸ்தானபந்நர்களான ஆழ்வார்களுக்கு பக்தியாதி அவஸ்தாவிசேஷங்களான அலங்காரங்களை யுண்டாக்கி அநுபவித்து த்ருப்தனாகிறான்.

பரிபூர்ணாநுபவத்துக்கு உபகரணமான இந்த பக்தி கிரமேண அபிவ்ருத்தையாகிறது. "பேரமர்காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி" என்கிறபடியே முந்தி கடலுக்கு ஒப்பாக அபிவிருத்தி யடைந்து. பிந்தி "மண்டிணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதால்" என்கிறபடியே ஸமுத்ரங்களேழிற்கும் பூமிக்கும் ஆகாசத்திற்கும் மேலாக வ்ருத்தியடைந்து "முநியே நான்முக"னில் "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த" என்கிறபடியே தத்வத்ரயத்துக்கும் மேலாக வ்ருத்தியடைந்தது.

மாஸோபவாஸிக்கு போஜநப்புறப்பூச்சுப்போலே ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவத்தைக்கொடுத்துப் பிந்தி ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்களாலே அபரிச்சின்னையாயிற்று. மாஸோபவாஸிக்குப் புறப்பூச்சாவது ஒருமாஸம் உபவாஸமிருந்தவனுக்கு உடனே பூர்ணமான ஆஹாரத்தைக்கொடுத்தால் ஸாத்மிக்கமாட்டாதாகையாலே ஆஹாரத்தை அரைத்து மேலே பூசி அது ஸாத்மித்தவாறே ஸ்வல்பம்

ஸ்வல்பமாக ஆஹாரத்தைக் கொடுத்துப் பின்பு பரிபூர்ணமான ஆஹாரத்தைக் கொடுக்கை.

அப்படியே "ஆற்ற நல்லவகைகாட்டும் அம்மான்" என்கிற படியே ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவத்தைக்கொடுக்கும். ஸம்சிலேஷ விசிலேஷங்களாவன.— தர்சநஸமாநாகாரமான மாநஸாநுபவ மிருக்க பாஹ்ய ஸம்சிலேஷாபேக்ஷை பிறந்து அதுகிடையாமை யாலே மாநஸாநுபவம் அஸத்கல்பமாகை. இது விசிலேஷம். ஸம் சிலேஷமாவது.— இப்படிக்கலங்கினவர்க்கு குணாநுபவத்தைக் கொடுத்து இந்த விசிலேஷத்தைமாற்றுகை. இப்படி இருந்துள்ள பக்தி விசேஷமாவது.— தோழி, தாயர், மகள் என்கிற அவஸ்தா பேதங்களையுடைத்தாய் ஈசுவரனை விஷயீகரிக்கும். தாயர், தோழி, மகள் என்கிற அவஸ்தைகளாவன.— உபாயாத்யவஸாயம், ஸம்பந்த ஜ்ஞானம், ப்ராப்யத்வரை இவைகளாகிற பக்த்யவஸ்தாவிசேஷங்கள்.

இப்படி ஸ்திரீத்வாவஸ்தை வரக்கூடுமோவென்னில், "வாம வாஸ்யா: வஜ்ரவக்த்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா: ஜவநம்வநம் யாஸ்ஸ்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: வும்ஹாவம் மநஸாயயு:" "பாஞ்சால்யா: பத்ம பத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா: ஜகநம்கநம் யாஸ்த்ரியோ த்ருஷ்டவந்த் யஸ்தா: பும்பாவம் மநஸாயயு:" என்கிறபடியே ப்ராக்ருதையான த்ரௌபதியினுடைய அவயவவிசேஷத்தைக்கண்டு ஸஜாதீயை களான ஸ்திரீகள் புருஷ்பாவனையை அடைந்திருக்கச்செய்தே அப்ராக்ருதமான புருஷோத்தமனுடைய திவ்யமங்கள விக்ரஹத் தைக்கண்டு ஸ்திரீபாவத்தையடைவது கிம்புனர் ந்யாயஸித்தமிறே. மேலும், "ஸ்த்ரீப்ராயமிதரம்ஜகத்" என்கிறபடியே ஸ்திரீபாவம் ஸ்வாபாவிகமாயிருப்பதுபோல் அநந்யார்ஹசேஷத்வ முதலான தர் மங்களுடைய ஸாம்யத்தாலே பிராட்டிமார் அவஸ்தையையும் அடையும்படி பண்ணுவிக்கும. "உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதா பவத்" "உபமாநமசேஷாணும் ஸாதுநாம் யஸ்ஸதா பவத்" என்கிறபடியே ப்ரஹ்லாதாழ்வான் ஓரோர் ப்ரகாரத்திலே பகவத் விஷயத்தில் அவகாஹித்தவர்களுடைய படியை உடையரா யிருக்குமாப்போலே ஆழ்வாரையும் அவர்களுடைய படிகளை ஒரொரு ப்ரகாரத்தாலே உடையராம்படி பண்ணுவிக்கும்.

இவருக்குப் பிராட்டிமாருடைய அவஸ்தைவருகிறபடியை "வித்யை தாயாகப்பெற்று" என்று தொடங்கி "குருமாமணியாயணையும் வஸ்துவிற்கு மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று" என்னுமளவாக ஆசார்யஹ்ருதயத்தில் ஒரு சூர்ணையாலே நிரூபிக்கப்பட்டது. இதில் தாயார் முதலான அவஸ்தைகளையுடையராய்ப் பேசுமது அந்யாபதேசம். ஜ்ஞாநாவஸ்தைகளாகச் சொல்லுவது ஸ்வாபதேசம். இவற்றுள் அந்யாபதேசமாவது.— தன்னுடைய அபிப்ராய விஷயமான அர்த்தத்தை வேறொரு ப்ரகாரமாகப்பேசுவது. ஸ்வாபதேசமாவது.— தன்னுடைய அபிப்பிராய விஷயமான அர்த்தத்தை அந்யாபதேசத்தின் உள்ளீடாகவைத்துப் பேசுவது. இது வ்யங்கியார்த்த மெனப்படும். மஹாகாவ்யங்களெல்லாம் இப்படியான வ்யங்கியார்த்தத்தையே ப்ரதானமாகக்கொண்டிருக்கும். ஆழ்வாருடைய திவ்யஸூக்தி அநுபவபரீவாஹரூபமாக பகவதிச்சையாலே ப்ரவ்ருத்தமான மஹாகாவ்யமாகையாலே வ்யங்க்யார்த்தப் பிரதானமாயிருக்கும். அந்யாபதேச ஸ்வாபதேசங்களுக்கு ஒருதாஹரணம்.— "सम्पादयति दैवाच्चेदपकेलनं कुटजं मधुकरो महान्। मकरन्दतुन्दिलानां अरविन्दानां अयं मान्यः" "ஸம்பாகததவதிதைவாத் அபகேளநம் குடஜ மதுகரோ மகா:, மகரந்ததுந்திலாநாம் அரவிந்தாநாம் அயம்மாந்ய:" என்பதில் குடஜபுஷ்பமே தெய்வவசமாக மதுகரமானது வந்தால் அதை அநாதரியாதே; அந்த மதுகரமானது மதுவால் நிறைந்திருக்கிற தாமரஸ புஷ்பங்களால் நன்கு மதிக்கத்தக்கது என்ற சப்தார்த்தம் அந்யாபதேசம். இதில் கவி கருதிய உள்ளுறையான பொருள் (ஒரு பிரபுவைப்பார்த்து) வண்டுபோல் மதுரவாக்காயும், "सर्वतस्सारमादद्यात् पुष्पेभ्य इव षट्पदः" "ஸர்வ தஸ்ஸார மாதத்யாத் புஷ்பேப்ப இவஷட்பத:" என்கிறபடியே பெரியோரிடங்களில் ஸாரமான அர்த்தங்களை கிரஹித்திருக்கிற வித்வான் உன்னிடத்தில் வருகிறான் அவனை அநாதரிக்காதே; தேன்போலும் இனிய குணங்கள் நிறைந்த ரஸிகர்களான பிரபுக்களால் மிகவும் நன்கு மதிக்கத்தக்கவன் என்னும் வ்யங்கியார்த்தமாகும்; இப்படிப்பட்ட முக்யார்த்தங்களே ஸ்வாபதேசமெனப்படும். தமிழ்நூல்களிலும் "இளைதாக முண்மரங்கொல்ககளையுநர், கைகொல்லுங்காழ்த்தவிடத்து" (குறள்) என்பது போன்ற காவ்யரசனைகளா லறியலாம்.

தொடரும்.

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(177-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த நசிகேதாக்னியின் ஸ்வரூபத்தைப் போதிப்பிக்கின்ற வித்யையை நன்றாய் அப்யஸித்து அநுஷ்டித்து அதனால் பிறவியை அடையாமலிருப்பதற்குக் காரணமாயிருக்கின்ற ப்ரம்மோபாஸனத்தை அடைந்து மோக்ஷத்தையடைவான் என்று யமதருமன் உரைத்து மேலும் நசிகேதஸ்ஸை நோக்கி இவ்வாறு அடைகின்றவர்களுள் நீயே முதன்மைவாய்ந்தவனாகவிருப்பாய் என்றெண்ணுகிறேன். களிப்பின் மிகுதியால் மறுமுறையும் சொல்லுகிறேன். உன் பெயராலே இந்த அக்னியானது வழங்கப்படட்டும். இதுநிற்க, என்னுடைய கடன் ஒழிவதற்கு மற்றொரு வரத்தையும் கேட்பாயாக; என்றான்.

நசிகேதஸ், தருமராஜனை நோக்கி உலகத்தில் உத்தமபுருஷார்த்தமாகிய மோக்ஷத்தைவிரும்பியவர்கள் எல்லா பந்தங்களினின்றும் விடுபடுவார்களன்றோ! ஆதலால் அந்த மோக்ஷத்தின் உண்மையை உம்மிடத்தில் அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் மோக்ஷ விஷயத்தைக்குறித்து மதவாதியர்கள் பலவாறாக அபிப்பிராயப்படுகின்றார்கள். சிலர் ஞானஸ்வரூபனாகிய ஆத்மாவின் ஸ்வஸ்வரூபத்தின் நாசத்தையே மோக்ஷமென்கின்றனர். வேறுசிலர் ஞானஸ்வரூபியான ஆத்மாவிற்கு நாசமேற்படுவதில்லை. ஆத்மாவோடு ஸம்பந்தித்துள்ள அவித்யா (அஜ்ஞான) நாசமே மோக்ஷமென்கின்றனர். இன்னும் சிலர், ஆத்மாவின் விசேஷ குணங்கட்கு நாசமுண்டாகி அந்த நாசத்தோடு ஆத்மா பாஷாணத்திற்கு (கல்லிற்கு)ச் சமமான நிலையுற்றிருப்பதே மோக்ஷமென்கிறார்கள். மற்றும் சிலர் † அபஹதபாப்மாவாயுள்ள பரமாத்மாவையடையும்

† அபஹதபாப்மா—பாபமற்றவன்.

விருப்புடையவர்களாய் அந்த பரமாத்மாவனுடைய உபாதிரூபமான ஸம்பந்தத்தை நிமித்தமாகக்கொண்டு ஜீவஸ்வரூபத்தையடைந்து அதன்மேல் அந்த உபாதிரூபமான ஸம்பந்தத்தின் நாசம் ஏற்படுவதால் பிர்ம்மபாவத்தை அடைவதே மோக்ஷமாக உணர்கின்றனர். சிலர் வேதத்தின் தத்வஜ்ஞானத்தின் முடிவை நன்கறிந்து ஸமஸ்த ஜகத்திற்கும் ஆதிகாரணமாயும், ஹேயகுணரஹிதனுயும், அளவிடவொண்ணுத ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனுயும், அதிசயிக்கத்தக்க கல்யாண குணங்களையுடையவனுயும், எல்லா ஜீவர்கட்கும் ஆத்மாவாயுமிருக்கின்ற பரப்பிர்ம்மத்தின் ஸம்பந்தஜ்ஞானமுடையராய் அப்பிர்ம்மத்தின் அநுபவமே முக்யமாகக்கொண்டவனுக்கு அநாதிகர்மரூபமான அவித்தை யகலப்பெற்று அவனுக்குண்டாகிய பிர்ம்மாநுபவமே மோக்ஷமென்கிருர்கள்.

இங்ஙனம் மோக்ஷவிஷயத்தில் பலரும்பலபடியாகக் கருதுகின்றார்களாதலால் இவர் கருதுகின்றவைகளுள் எது உண்மையானதென்று எனக்கு நன்கு விளங்கவில்லை இனி § இந்த மோக்ஷத்தின் இயல்பைத்தெளிவாக எடுத்து விளக்குகின்ற வித்யையை நீவிரே உபதேசிக்கவேண்டும். இதையே யான் மூன்றுவது வரமாகக்கேட்கிறேனென்றான்.

தர்மராஜன், 'நாம் உபதேசிக்க விரும்பும் வித்யை பிர்ம்ம வித்யையன்றோ! அதை மனத்திற் கொள்ளுதற்கும் அரிதாகுமே; அதன் கரையைக்கிட்டுதற்குச் சக்திபற்று நடுவில் விழுந்துவிடுகின்றவன் பொருட்டு இதை உபதேசிக்கலாகாதே; இனி இவனைப் பரீக்ஷைசெய்து பார்ப்போம்' என்று சில சொல்லத்தொடங்கினுன் நசிகேதஸ்ஸே! உன்னுல் கேட்கப்பட்ட மோக்ஷ ஸ்வரூபத்தை நிரூபணஞ்செய்தற்கு மனிதரினும் புத்தியிற் சிறந்தவரான தேவர்க்கும் அரிதாகும். இந்தப் பிர்ம்மவித்யைக்கு ஆத்மதத்வஜ்ஞாநம்

§ "த்ரயாணாம்ஏவ வெநம்" என்றவிடத்தில் நசிகேதஸ் இங்கு மோக்ஷத்தின் இயல்பை உபதேசிக்கவேண்டுமென்று கேட்டதனுல் உபேயமான வஸ்துவின் ஸ்வரூபமும், உபேய வஸ்துவை விரும்புகின்றவனுகிய உபேத்ரு ஸ்வரூபமும், உபாய ஸ்வரூபமும் என்ற இம்மூன்றும் கேட்கப்பட்டதாயினவென்று பாஷ்யகாரர் அருளிச்செய்துள்ளார்.

மிகவும் ஆவசியகமாகும். உலகத்தில் பொதுவான தர்மநுட்பங்களை யறிவதற்கே சிரமமாயிருக்குமாகில் ஆத்மதத்வத்தையறிவது அரிதாகுமென்பது சொல்லவேண்டாமன்றோ! ஆகலால் நீ இப்பொழுது கேட்ட இவ்வரத்தைவிட்டு மற்றொன்றைக்கேட்பாய் என்றான்.

இவ்வுரைகளைக்கேட்ட நசிகேதஸ் யமதருமனைநோக்கி, தேவர்களும் மோக்ஷத்தின் இயல்பின்னதென்றறியலாற்றாது ஸம்சயமுற்றிருக்கின்றார்களென்பது உண்மையே. ஆனால் உம்மைப்போல் இந்த வித்யையைத் தெளிவாகவெடுத்துரைக்கவல்லார் பிறரில்லையென்பதுதிண்ணம். அழிவற்ற புருஷார்த்தத்தைக் குறிப்பிடுகின்ற இந்த மூன்றாவது வரத்தைக்காட்டிலும் சிறந்தொன்றில்லையென்றே நிச்சயமாகக் கருதுகிறேன்; என்றான்.

அப்பொழுது யமதருமன் தனக்குள் சிலவற்றைக் கருதிக்கொள்கின்றான். 'இப்பொழுது இவன் கேட்ட விஷயமானது அறிதற்கு மிகவும் சிரமமுள்ளதாயிருந்தபோதிலும் இவன் இதனையே பிடிவாதமாகக் கேட்கின்றானாதலால் இடையில்விட்டுவிடமாட்டான்; ஆனாலும் இவன் கேவல விஷயசுகங்களில் விருப்புடையவனாயிருப்பானாகில் இந்த மோக்ஷவிஷயத்தில் பிரவேசிக்கமாட்டான். எவ்வாறிருக்கினும் இன்னும் இவனைப் பரீக்ஷித்துப் பார்ப்போம்' என்று வினவத்தொடங்கினான்.—

நசிகேதஸ்ஸே! மிகுந்த ஆயுளையும், புத்ர பௌத்திரர்களையும், அளவிடுதற்கரிய யானை, குதிரை முதலியவைகளுடன் கூடிய ராஜ்யத்தையும், விஸ்தாரமான பூமிகளையும், உன் மனத்திற்கிசைந்த எவ்வளவு பொருள்வேண்டுமோ அவ்வளவையும், பிராயம் நூறு என்ற அளவிற்குமேல் எவ்வளவு கால ஜீவித்திருக்கவிரும்புகின்றனையோ அதனையும் தருகிறேன். மேலும் பூமியில் விஷயசுகங்களை அநுபவிக்கிறவர்களுக்குள் உன்னை முதன்மையுற்றவனாகச் செய்கிறேன்; உலகத்தில் ஜனங்களால் அடையமுடியாதிருக்கின்ற பொருள்களெல்லாம் நீயடையுமாறு செய்கிறேன்; என்றுரைத்தனன்.

அப்பொழுது அப்ஸரஸ்திரீகள் நடனஞ்செய்யத் தொடங்கினார்கள். இந்த ஸ்திரீகளுடைய ஆடல்பாடல்களிலும் அழகிலும்

இவன் மயங்கினாலும் மயங்கக்கூடும் என்று கருதிய யமதருமன் நசிகேதஸ்ஸை நோக்கி அப்ஸரஸ்திரீகளைச் சுட்டிக்காட்டி இந்த ஸ்திரீகள் பூலோகத்தில் வசிக்கின்ற மனுஷ்யர்கட்குக் கிடைத்தற்கரியவராவார். மேலும் ஊர்வசியைச் சுட்டிக்காட்டி 'இவளை நீயறியாய். இவளுடைய விருத்தாந்தத்தைச் சிறிது சொல்லுகிறேன் கேட்பாய்.— * ஜகத்காரண்பூதனான நாராயணன் தபசு செய்துகொண்டிருந்தகாலத்து அந்தத் தபசைக் கெடுப்பதற்கு அநேக அப்ஸரஸ்திரீகள் தோன்றினர். அவர்களைக்கண்ட நாராயணன் அந்த அப்ஸரஸ்திரீகள் வெட்கித்துப்போமாறு தன்னுடைய துடையிலிருந்து ஒரு ஸ்திரீயைத் தோற்றுவித்தனர். அவளேதான் இவள். ஊராகிய துடையிலினின்றும் தோன்றினவளாதலால் ஊர்வசியென்று பெயர் பெற்றனள். இவளது கட்டைவிரலின் அழகைக் கண்ட அப்ஸரஸ்திரீகள் 'நம்முடைய அவயவ அழகுகளனைத்தும் இவளுடைய நகத்தினழகிற்கு ஈடாகமாட்டா' என்று நாணமுற்றனர். இத்தகைய ஸ்திரீகளை என்னுடைய அநுமதியின்றி எவருமடையமாட்டார். நீ இவர்களைக்கொண்டு உனக்கு வேண்டிய பணிவிடை செய்வித்துக்கொள். முன் 'மோக்ஷத்தின் இயல்பை உபதேசிக்கவேண்டும்' என்று கேட்ட கேள்வியை மறந்துவிடுவாய் என்றனன்.

இவ்வுரைகளைக்கேட்ட நசிகேதஸ் மிகுந்த வருத்தத்துடன் எதிரே நிற்கின்ற அப்ஸரஸ்திரீகளால் ஒருகலக்கத்தையுமடையாமல் எமதருமனை நோக்கிச் சொல்லத்தொடங்கினான்.— தருமராஜனே! உம்மால் முன்பு குறிப்பிடப்பட்டவைகளும், எதிரே நிற்கின்ற அப்ஸரஸ்திரீகளும் நிலைநிற்கும் பொருள்களாகுமோ? இந்த சராசரங்களோடு கூடிய பிர்ம்மாண்டத்தைச் சிருஷ்டிக்கின்ற பிர்ம்மாவுக்கும் ஆயுள் அற்பந்தானே. அங்ஙனமிருக்க உம்மிடத்தில் ஆயுளை விரும்பிப் பெற்றுக்கொள்வதால் எனக்கென்ன நலனுண்டு? மேலும்

* "[illegible]" என்று மஹாபாரதத்தில் ஆரண்ய பருவத்தில் ஊர்வசியின் உற்பத்தியைக்குறித் துரைத்திருப்பதும் இங்கறியத்தக்கது.

"நஜாது காம: காமாநாம் உபபோகேந ஶாம்யதி" "நஜாது காம: காமாநாம் உபபோகேந சாம்யதி" என்றபடி உலகத்தில் வாழும் மாந்தர்கள் பொருளால் திருப்தியடைந்தார்களென்பதுண்டோ? எவ்வளவு பொருள்களையடைந்தாலும் ஆசையால் பீடிக்கப்பெற்றவர்களாய் திருப்தியடையாதிருக்கத்தானே காண்கிறோம். இப்பொழுது நீவிர் சொல்லுகிறபடி உமது அநுக்ரஹம் பெற்றும் ராஜ்யபதவியிருக்கும்வரை இந்த அப்ஸரஸ்திரீகளோடு கூடி இன்பம் நுகரவியலும். உமக்கே அழிவு ஏற்படும்போது உம்முடைய அநுக்ரஹம் பெற்றவனாகிய யான் எங்ஙனம் வாழ்வது? ஆதலால் இந்த அற்பமான இன்பங்களைக்காட்டி என்னை ஏமாற்றத் துணிவது உம்மைப்போன்ற பெரியோர்கள் நிலைமைக்கிசைந்ததாகுமோ? இதுநிற்க;

மகத்தானபாரலௌகிகமென்று வழங்கப்பெறுகின்ற பிர்ம்ம ஸ்வரூபத்தை யடைதற்குக்காரணமாயும், தத்வதரிசிகளால் விரும்பத்தக்கதாயு மிருக்கின்ற யாதொரு பிர்ம்மவித்யை யுண்டோ அதையே உபதேசிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கிறேன். இந்த வரத்துக்குச் சமமாயும் அதனாலுண்டாகும் பிரயோஜனத்துக்கு ஒப்பாயுமுள்ள மற்றொன்றுண்டென்று யான் ஒருபொழுதும் கருதமாட்டேனென்பதை நீவிர் திண்ணமாக அறிவீராக; என்றான்.

(தொடரும்.)

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

—o—

(184-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, அர்ச்சாராதனத்திற்குப் பிரயோஜனமில்லை யென்கிற இரண்டாவது கேள்வியும் பொருத்தமுடையதில்லை; அர்ச்சாராதனத்திற்குப் பிரயோஜனம் உண்டென்பதைப் பலவகையாலு மறியலாம். உலகப்பற்றற்ற ஜ்ஞாநிகளும், மற்றவர்களும் அர்ச்சாராதனத்திற்குப் பலமுண்டென்று கண்கூடாகக் காண்கின்றார்கள். ஜ்ஞாநி

இவன் மயங்கினலும் மயங்கக்கூடும் என்று கருதிய யமதருமன் நசிகேதஸ்ஸை நோக்கி அப்ஸரஸ்திரீகளைச் சுட்டிக்காட்டி இந்த ஸ்திரீகள் பூலோகத்தில் வசிக்கின்ற மனுஷ்யர்கட்குக் கிடைத்தற்கரியவராவார். மேலும் ஊர்வசியைச் சுட்டிக்காட்டி 'இவளை நீயறியாய். இவளுடைய விருத்தாந்தத்தைச் சிறிது சொல்லுகிறேன் கேட்பாய்.— * ஜகத்காரண்பூதனை நாராயணன் தபசு செய்துகொண்டிருந்தகாலத்து அந்தத் தபசைக் கெடுப்பதற்கு அநேக அப்ஸரஸ்திரீகள் தோன்றினர். அவர்களைக்கண்ட நாராயணன் அந்த அப்ஸரஸ்திரீகள் வெட்கித்துப்போமாறு தன்னுடைய துடையிலிருந்து ஒரு ஸ்திரீயைத் தோற்றுவித்தனர். அவளேதான் இவள். ஊராகிய துடையிலினின்றும் தோன்றினவளாதலால் ஊர்வசியென்று பெயர் பெற்றனள். இவளது கட்டைவிரலின் அழகைக்கண்ட அப்ஸரஸ்திரீகள் 'நம்முடைய அவயவ அழகுகளனைத்தும் இவளுடைய நகத்தினழகிற்கு ஈடாகமாட்டா' என்று நாணமுற்றனர். இத்தகைய ஸ்திரீகளை என்னுடைய அநுமதியின்றி எவருமடையமாட்டார். நீ இவர்களைக்கொண்டு உனக்கு வேண்டிய பணிவிடை செய்வித்துக்கொள். முன் 'மோக்ஷத்தின் இயல்பை உபதேசிக்கவேண்டும்' என்று கேட்ட கேள்வியை மறந்துவிடுவாய் என்றனன்.

இவ்வுரைகளைக்கேட்ட நசிகேதஸ் மிகுந்த வருத்தத்துடன் எதிரே நிற்கின்ற அப்ஸரஸ்திரீகளால் ஒருகலக்கத்தையுமடையாமல் எமதருமனை நோக்கிச் சொல்லத்தொடங்கினன்.— தருமராஜனே! உம்மால் முன்பு குறிப்பிடப்பட்டவைகளும், எதிரே நிற்கின்ற அப்ஸரஸ்திரீகளும் நிலைநிற்கும் பொருள்களாகுமோ? இந்த சராசரங்களோடு கூடிய பிர்ம்மாண்டத்தைச் சிருஷ்டிக்கின்ற பிர்ம்மாவுக்கும் ஆயுள் அற்பந்தானே. அங்ஙனமிருக்க உம்மிடத்தில் ஆயுளை விரும்பிப் பெற்றுக்கொள்வதால் எனக்கென்ன நலனுண்டு? மேலும்

---

* “[illegible] நாராயணஸ்ய [illegible]” என்று மஹாபாரதத்தில் ஆரண்ய பருவத்தில் ஊர்வசியின் உற்பத்தியைக்குறித் துரைத்திருப்பதும் இங்கறியத்தக்கது.

கள் பரப்பிர்ம்மம் எங்கும் நிறைந்துள்ளதென்ற நிலைமையை ஸாக்ஷாத்கரித்துள்ளவர்களாயிருக்கினும் அவர்கள் துரும்பு செரிந்த சில்லோடு முதலியவைகளில் காணக்கூடாதநிலைமையை அர்ச்சாவிக்ரஹத்தில் காண்கிறார்கள். எவ்வாறெனின்; அர்ச்சாவிக்ரஹத்திற்கு மண்டப, கோபுர, பிரகார விசேஷ நிர்மாணாதிகளாலே உபசார விசேஷமும், துரும்பு முதலியவைகளிலில்லாத திவ்யமங்களவிக்ரஹ ஸௌந்தர்ய விசேஷமும், திவ்யாபரணச்சேர்த்திகளும், நித்யோத்ஸவாதி வருஷோத்ஸவ வைபவமுமிருக்கக் காண்கின்றோமல்லவா? இவற்றையெல்லாம் சமான்யஜனங்களும் கண்டு ஆதரித்துக் கூட்டங்கூட்டமாகத் தொழுதுநிற்கிறார்கள். இந்நிலையைத் துரும்பு முதலியவற்றில் காணுவதெங்ஙனம்? ஜ்ஞாநிகளுக்கும் துரும்பு முதலியவற்றில் காணப்பெறாததொரு பெருமை தம்முடைய ஸ்வாமியான எம்பெருமானுக்குண்டாகக்கண்டால் மிகவும் ஆநந்திப்பார்களன்றோ! இதுவே அவர்கட்குத் திருஷ்டபலமாகலாமென்பதிற் குறையில்லை.

மேலும், நாயகனைவிட்டுப்பிரிந்த நாயகிக்குப் பிரிவாற்றாமை மேலிட்டு 'இனி எவ்வாறாவது என்னுயகனோடு கூடி மகிழக்கடவேன்' என்ற ஓர் அவசரபுத்தியுண்டாயபொழுது அந்த விரஹமுடைய நாயகி நாயகனைப் படத்திலெழுதிக்கண்டநுபவிப்பதுபோல அர்ச்சாவதார விஷயத்தில் எல்லோருக்கும் அநுபவமுண்டாகலாம். ஆதலால் அர்ச்சாராதனத்திற்குத் திருஷ்டபலமில்லையென்பது எவ்வாற்றானும் பொருந்தாது.

மேலும், அர்ச்சையைக்கண்டநுபவிப்பதுபோன்ற அநுபவம் ஜ்ஞானிகட்குத் துரும்பு முதலியவற்றிலு முண்டாகலாமென்று சொல்வதும் கூடாது.

துரும்பு முதலியவைகளும் எம்பெருமானுடைய சரீரங்களாதலால் அவற்றினும் ப்ரதிபத்தியுடன் கைங்கர்யஞ் செய்யலாமே என்று சொல்லவொண்ணாது. இந்த ஜ்ஞானியானவன் லக்ஷ்மீ ஸமேதனான எம்பெருமானே தான் செய்யும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்பவனென்ற கொள்கையுடையவனாதலால் அக்கொள்கை நிறைவேறுதற்கு அவன் அர்ச்சாரூபியான எம்பெருமானை ஆராதிக்கவேண்டியதவசியமன்றோ!

இனி, யோகாப்யாஸத்தில் பிரவேசிப்பாருக்கும் இந்த அர்ச்சாராதனம் திருஷ்டபலத்தைத் தரவல்லதென்னலாம். யோகாரம்பத்தில் ஹ்ருதயகமலத்தில் திவ்யமங்கள விக்ரஹத்துடன் கூடிய எம்பெருமானைத் தியானஞ் செய்வதென்பதும் ஓர் வழக்காகும். அதற்கு அர்ச்சாவிக்ரஹ தரிசனம் மிகவும் சாதகமாகவிருக்கும். இதனால் மானஸமான ஆராதனத்திற்கு அர்ச்சாராதனம் இன்றியமையாததாயிருக்குமென்பது பெறப்பட்டது. மேலும் †'கரணத்ரயத்தையும் பகவத் விஷயத்தில் விநியோகப்படுத்தவேண்டும்' என்றமுறைப்படி விநியோகப்படுத்த முற்படும்போது அர்ச்சாராதனம் இன்றியமையாததாகும்.

"காயேநவாசா" என்றதனால் கர்மாவினுடைய இறுதியில் யாவரும் கரணத்ரயத்தாலும் பகவதர்ப்பணஞ் செய்வதைக்காண்கிறோமாதலால் அர்ச்சாராதனத்தால் மாத்திரம் காயிக கைங்கர்யம் ஸித்திக்கிறதென்பது எவ்வாறு பொருந்துமென்று சொல்லவொண்ணாது. சொல்லில் வாசிக மானசிகமான பிற வியாபாரங்களுங்கூட பகவத்விஷயமாக ஆகிறபடியால் தனியே தியானமென்றும் ஸ்தோத்திரமென்றும் செய்யவேண்டாவாய் முடியும். இதுநிற்க; எம்பெருமான் கட்புலனாகாமையால் காயிகமான ஆராதனம் கூடாது; மானசிக வாசிகங்களால் தியாநமும் ஸ்துதியுஞ் செய்யலாமென்று சொல்லவொண்ணாது. தியானமும் ஸ்துதியும் மானச வாசிகங்களால் ஸித்திப்பதுபோல அர்ச்சாராதனத்தால் காயிகபஜனமும் ஸித்திக்கலாம். இங்ஙனமிருக்க இவ்வாராதனத்தைவிடுவது உசிதமாகாது.

மேலும் தியானமும் ஸ்துதியும் விக்ரஹத்தையும் குணத்தையும்பற்றி யுண்டாவனவாம். ஸ்வரூபத்தால் மாத்திரம் இவையுண்டாகுமென்பதில்லை. ஆக விக்ரஹமில்லாதபோது தியானம் உண்டாவதரிதாகும். இதுநிற்க;

பிரத்யக்ஷமில்லாத இந்திராதி தேவதைகளை உத்தேசித்து அக்னியில் ஹவிஸ்ஸை ஹோமம் செய்தால் அது இந்திராதிகட்கு அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவுக்குப் பிரீதியையுண்டுபண்ணு

† கரணத்ரயம்—மனம், வாக்கு, காயம்.

கிறதென்று ஒப்புக்கொள்கிற ப்ராமாணிகர்களுக்கூட ப்ரத்யக்ஷமாக அர்ச்சாவிக்ரஹத்திற்குச் செய்யும் உபசாரமானது அவனுக்குப் பிரீதியையுண்டுபண்ணமாட்டாதென்று சொல்வது விந்தையே!

இன்னும், வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டவர்கள் தேவதைகள் வேதமந்திரங்களால் அழைக்கப்பட்டு ஆங்காங்கு ஸாநித்யஞ் செய்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கின்றார்கள். இவ்வாறு ஒப்புக்கொள்கின்ற இவர்களும் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளைத் துரும்பு முதலியவைகளிலும் ஆராதனை செய்யலாமே என்று வாதிக்கிறார்கள். இதற்குச் சமாதானம் முன்னர் உரைக்கப்பட்டது.

சாஸ்திரத்தில் காயிகமான பகவத் பஜனத்தை விதிக்கவந்த விடத்தில் அர்ச்சை, ஸ்தண்டிலம் (யாகபூமி) அக்னி, ஸூரியன், ஜலம், ஹ்ருதயம், ப்ராஹ்மணர் என்ற இவ்விடங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராதிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டுளது. காயிகமாகச் செய்கிறவையெல்லாம் பகவதர்ப்பணஞ் செய்கிற முறையாலே மாத்திரம் காயிகமான ஆராதனம் ஸித்தியாது. மேலும் ஸர்வேசுவரன் ஆத்மாக்களுக்குச் சரீரேந்திரியங்களைக் கொடுத்துதவியது அவன்றன்னை வணங்குவதற்காகவன்றோ! இங்ஙனமிருக்க வாசிக மானசிகமான வியாபாரங்களைமாத்திரம் பகவத்விஷயமாக்கிக் காயிக வியாபாரத்தை வேறு விஷயமாக்குவது, ஓரரசன் தனக்குபசாரஞ் செய்வதற்காக ஒரு சேவகனிடத்தில் குடையையும் சாமரத்தையுங் கொடுப்பானாகில் அந்தச் சேவகன் குடையை மாத்திரம் இராஜாவுக்குபயோகப்படுத்திவிட்டுச் சாமரத்தைத் தனக்குபயோகப்படுத்திக் கொள்வதுபோலாகும்.

ஆனால் இந்திரியங்கள் பக்தாராதனத்திற்கே உரிமையுற்றத யிருக்குமாகில் பகவத்விஷயப்பிரவர்த்தியே அவற்றிற்கு இயற்கையாகவே அமைந்திருத்தல்வேண்டும். அங்ஙனமமையாமல் இந்திரியங்கள் விஷயாந்திரங்களில் மண்டித்திரிகின்றமையால் இவற்றிற்கு இவ்வாறு திரிவதே இயற்கையாமென்றன்றோ அறியக்கிடக்கிறதென்னில்; இந்திரியங்கட்கு விஷயப்பிராவண்யம் இயற்கையன்று. இவற்றிற்கு விஷயப்பிராவண்யம் பூர்வாசனையால் வந்ததாகையால்

அது ஔபாதிகம். ஒருவன் மற்றொருவனிடத்தில் சத்ருவைக் கொல்வதற்காக ஆயுதத்தைக்கொடுத்தால் அவ்வாயுதத்தைப்பெற்ற வன் அதைக்கொண்டு தன்னை முடித்துக்கொண்டால் அது ஆயுதத்தின் தோஷமென்றேனும் கொடுத்தவனுடைய தோஷமென்றேனும் சொல்வதற்கியலுமா? இதுநிற்க,

† பாயூபஸ்தங்களின் உபயோகங்கள். வேறுவகையாகக் காண்கின்றோமல்லவா? இவ்வாறிருக்க இந்திரியங்களெல்லாம் பகவதாராதனத்திற்காக ஏற்பட்டனவென்பது எவ்வாறு பொருந்துமெனின்; இந்த இரண்டு இந்திரியங்களும் பகவதாராதனத்திற்கமைந்த சரீரம் நிலைத்திருக்க மலாதிகளைக் கழிப்பதற்கு ஏதுவாயிருக்கும். ஆதலால் இவையும் பரம்பரையாகப் பகவதாராதனத்திற்குரிமையுடையனவாமென்பதிற் குறையில்லை யென்க.

உலகத்தில் செய்நன்றி மறவாதிருக்கின்றவர்கள் தம் விஷயத்தில் உபகரித்தவர்களைப் போட்டோ எடுத்து உபலாளனஞ் செய்வதை யாவருமறிவர். இவ்வாறிருக்க எல்லோருக்கும் சரீரேந்திரியங்களையும் பிரவர்த்தி நிவர்த்தி சக்திகளையும்கொடுத்துபகரித்தவனுகிய ஸர்வேசுவரனுடைய விக்ரஹாராதனத்தை நிந்திப்பார்களாகில் அவர்கள் எவ்வளவோ செய்நன்றி மறந்தவர்களென்று துணிவுற்றுச் சொல்லலாமன்றோ! இன்னும் ஒத்த அன்பினர் அன்பின்மிகுதியால் ஒருவரையொருவர் பிரியமாட்டாத நிலையெய்திப் போட்டோவெடுத்து ஒருவரை யொருவர் உபலாளனஞ் செய்துகொள்கிறார்கள். இதையறிந்தும் எம்பெருமானுடைய பிரதிமையை உபலாளனஞ் செய்வதை நிந்திப்பார்களானால் இவர்களுடைய நெஞ்சு பகவத்விஷயத்தில் எவ்வளவு வன்மையுடையதென்று சொல்லலாம்?

உலகத்தில் ஒருவருக்கொருவர் அன்பின் மிகுதியால் பிரதிமோபலாளனம் நேருவதுபோல ஜ்ஞாநியாயிருப்பவன் எம்பெருமானுக்குப் பிரீதி விஷயனாகையாலே ஜ்ஞானியினுடைய அர்ச்சாராதனம் எம்பெருமானுக் குண்டாகவேண்டுமேயென்னின்; நீங்கா அன்பினர் இருவர் ஒருவரையொருவர் விட்டுப்பிரியுங்காலம் நேர்

---

† பாயூபஸ்தங்கள்—மலஜல விஸர்ஜனஞ்செய்தற்குரிய இந்திரியங்கள்.

ந்துவிட்டால் அவர்கள் பிரிவாற்றாது மனந்தளர்வர். இந்த மனத் தளர்ச்சி நீங்குவதற்காகத்தான் ப்ரதிமையைக் கொண்டாடும்படி நேருகிறது. அதுபோலப் பக்தனுக்குப் ப்ரீதிமுதிர்ந்து எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க முடியாதபோது அர்ச்சாராதனம் இவனுக்கு விதியாலன்றிப் பிரீதியால் செய்யும்படி நேருகிறது. எம்பெருமானுக்குப் ப்ரத்யக்ஷமில்லாதபொருள் ஒன்றுமில்லை. இங்ஙனமிருக்கின்ற அவனுக்குப் பக்தஸாக்ஷாத்காரம் எப்பொழுதுமிருப்பதால் பக்தனுடைய விக்ரஹோபலாளனம் வேண்டுமென்பதில்லை. இதனால் ப்ரத்யக்ஷமாகக் காணக்கூடிய வேதவாக்யங்களில் அர்ச்சாராதனத்தை விதிக்காமையாலே அர்ச்சாராதனங்கூடாதென்று சொல்வது கண்டிக்கப்பட்டதாயிற்று. ராகப்ராப்தமான விஷயத்தில் விதிப்ரவர்த்திக்காது. இந்த ஆராதனம் பக்தனுக்குப் ப்ரீதியினால் உண்டாவதொன்றாகையால் ப்ரத்யக்ஷ வேதத்தில் அர்ச்சாராதனத்தை விதிக்காததினாலும் ஒரு குறையில்லை. இது விஷயத்தில் விதியேற்பட்டால் ப்ரயோஜனமில்லை.

இப்படியானால் ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம், பாஞ்சராத்திரம் என்ற இவைகளில் அர்ச்சாராதனத்தை விதிப்பதற்குக் கருத்தென்னையெனின்; அர்ச்சாராதனத்தில் ஆசையிருந்தும் ஆலஸ்யத்தாலே முயலாதிருப்பானொருவனுக்குப் ப்ரவர்த்தியுண்டாக வேண்டியதற்காக ராகப்ராப்தமான விஷயத்தை அநுவதித்துக் கூறியதென்றுகொள்க.

(தொடரும்.)

ஸ்ரீ:

மதிப்புரை.

யாதவமித்திரன்:— இஃதோர் மாதாந்தப் பத்திரிகை, கோபால குலத்தினர்க்குப் பெரிதும் பயனளிக்கத்தக்கது. ஸ்ரீமாந் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் என்பவரே இதன் உரிமையாளராவார். ஓர் சமூக முன்னேற்றத்திற்குப் பொருள் மிகப்படைத்தார் உறு துணையாயிருத்தல்வேண்டும் என்பதற்கேற்பத் தம் சமூக முன்னேற்றத்திற் குறுதுணையாயிருந்து இதை வெளியிட முற்பட்ட இவரது முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதே. இது நிற்க, கண்ண பிரான் யதுகுலத்திற்பிறந்து கோகுலத்தில் வளர்ந்து தத்துவதரிசியரெல்லாம் மனநைந்துருகுமாறு எளியசெயலையும் அரியசெயலையும் புரிந்தான். இவைபோன்ற செயல்கள் இறைவனுடைய ஏனைய அவதாரங்களிலில்லை யாதலால் அந்தணாளரிற் சீரியரான பெரியாழ்வாரும், அவர் திருமகளாரும் கோபஜன்மத்தை ஏறிட்டுக்கொண்டார்களென்பது வெள்ளிடைமலை. ஆகவே இக்குலம் முழுமுதற் கடவுளாலும் சிட்டர்களாலும் விரும்பத்தகும் பெற்றியதென்பது புலனாம். மேலும் ஒரு முயற்சியால் இருபேறு விளையுமேல் அது பெரிதும் போற்றத்தக்கதா மாதலால் இங்குச் சமூக முன்னேற்றத்தை நோக்கிய இப்பத்திரிகை சமய முன்னேற்றமுடையதாகவும் விளங்குகிறது. இன்னும் இது, பல கட்டுரையாளரின் இன்னுரைகளைக்கொண்டுள்ளதினால் பயில்வோர் பலருக்கும் பல சுவைபயக்கும் பான்மைத்து. இதன் வருஷச்சந்தா ரூபா ஒன்றே. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:—

யாதவமித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச்சித்திரை வீதி,
மதுரை.